**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை**

**முன்னிலை : திருமதி.K.அறிவொளி, M.A., M.L.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை**

**2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07-ம் நாள் செவ்வாய்கிழமை**

**விவாகரத்து கோரிக்கை மனு எண்.30/2025**

( CNR.No.TNSV01000953/2025)

-----

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், சிறுநல்லூர், கீழக்காடாவயல் கிராமத்தில் வசிக்கும் ராஜாமணி என்ற ஆரோக்கியசாமி அவர்கள் மகளும், சந்தியாகு என்ற தாஸ் அவர்களின் மனைவியுமான கிறிஸ்டின் சுமார் 31 வயதுள்ள மோனிகாபிளாரன்ஸ்.

......மனுதாரர்

/ எதிர் /

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், தச்சத்தெரு, கதவு எண்.216 என்ற முகவரியில் வசிக்கும் சூசைமாணிக்கம் என்ற மாணிக்கசேகர் அவர்கள் மகன் கிறிஸ்டின் சுமார் 35 வயதுள்ள சந்தியாகு என்ற தாஸ்.

........எதிர்மனுதாரர்

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 13.06.2019-ம் தேதியன்று கிறிஸ்துவ முறைப்படி பட்டுக்கோட்டை, மாதாகோவில் ரோடு, உலக இரட்சகர் தேவாலயத்தில் (HOLY REDEEMERS CHURCH) நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்யக் கோரியும், வழக்கின் செலவு தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் மணமுறிவுச் சட்டம் பிரிவு 10(1)(vii)-ன் கீழ் இம்மனு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற கட்டண சட்டம் படி தமிழ்நாடு நீதிமன்ற கட்டணமாக ரூ.50/- செலுத்தப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள்: 12.03.2025, 05.04.2025, 17.04.2025

மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 21.04.2025

இம்மனு இந்நீதிமன்றத்தில் 26.03.2026-ம் தேதி என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.நவநீதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதராரருக்கு 03.12.2025 ம் தேதியன்று அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், மேற்படி எதிர்மனுதாரர் ஆஜராக போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், 09.02.2026 அன்று எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாத காரணத்தினாலும் தோன்றா தரப்பினராக்கி ஒருதலைபட்சமாக்கப்படும், மனுதாரர் தரப்பு வாதுரையை கேட்டும், மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>உத்தரவாணை</u>**

1. இம்மனு அனுமதிக்கப்படுகிறது.
2. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 13.06.2019-ம் தேதியன்று பட்டுக்கோட்டை, மாதாகோவில் ரோடு, உலக இரட்சகர் தேவாலயத்தில் (HOLY REDEEMERS CHURCH) வைத்து நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து மனுதாரருக்கு விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.
3. செலவுத் தொகை இல்லை.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07-ம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.07 16:15:12 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.